கணித்தமிழ்

மின்னிதழ் : 1 அக்டோபர்-டிசம்பர் 2024

காலாண்டிதழ்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்...

24 மொழிகளில் தமிழ்

“தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு” என்று தமிழர் பண்பாட்டை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். உயர்விழுமியங்களும், மனிதநேயமும், சகோதரத்துவமும், தனித்த அழகியலும் நிறைந்தது தமிழர் பண்பாடு. இதனை அயலக மாணவர்கள் அறிந்து, உணர்வுப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்க் கலாச்சாரப் பரப்புரைப் பணிகள்-சிலம்பப் பயிற்சிக்கான காணொலிகள், தேவாரம் பாடல்களை இன்றைய தலைமுறையினருக்கு ஏற்றவாறு இசைக்கோர்ப்பு செய்து வழங்குதல் ஆகியவை - தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன....

தற்போது வெளியிடப்படும் இந்த முதல் நிலை முதல்பருவ பாடநூல், இன்றைய தலைமுறைக்கு, அதிலும் குறிப்பாக அயலக வாழ் தமிழ் மாணவர்களுக்கு ஏற்றவகையில் தமிழ்மொழியை எளிமையாக, மாணவர்களின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் அறிமுகப்படுத்துகிறது. மேலும், பல்லூடகக் கற்றல் - கற்பித்தல் பெருகி வரும் இன்றைய சூழலுக்கு ஏற்ப மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் துணைக்கருவிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன....

24 மொழிகளில் தமிழன்னையின் பெயரைப் பாடப்புத்தக முகப்புகளில் கண்டதில் பேருவகை கொள்கிறேன். இந்த பாடப்புத்தகம் 24 மொழிகளில் மொழிபெயர்ப்பும், 12 மொழிகளில் ஒலிபெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது. ■

24.09.2022 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்ப் பரப்புரைக்கழகத் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து..

ஆசிரியர் குழு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்
த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
தலைவர்,
தமிழ் இணையக் கல்விக்கழகம்

பொறுப்பாசிரியர்
சே. ரா. காந்தி, இ.ர.பா.ப.,
இயக்குநர்,
தமிழ் இணையக் கல்விக்கழகம்

ஆசிரியர் குழு

முனைவர் அ. ஜேம்ஸ்
திட்ட அலுவலர்

த. ராஜன்
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்

மு.சு. அருண்குமார்
திட்ட மேலாளர்

வடிவமைப்பு
பார் கிரியேட்டிவ்

தொடர்புக்கு

தமிழ் இணையக் கல்விக்கழகம்
காந்தி மண்டபச் சாலை
கோட்டூர்புரம்
சென்னை – 600 025.
தொலைபேசி : 91-44-2220 9400
மின் அஞ்சல்: tva@tn.gov.in
இணையதளம் : www.tamilvu.org

உள்ளே...

5 உலகமெலாம் பரவும் தேமதுரத் தமிழோசை

9 கேந்திரிய வித்யாலயாக்களில் தமிழ்

13 அறிவுச் சாறு தரும் நூற்கனிச் சோலை

15 கணித்தமிழ் 24 மாநாடு: செயற்கை நுண்ணறிவு யுகத்தில் தமிழ்

22 கணித்தமிழ்ப் பேரவை

வாழ்த்துரை

முனைவர். பழனிவேல் தியாக ராஜன்
அமைச்சர், தகவல் தொழில்நுட்பவியல்
மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

பாரெங்கும் தமிழ் முழக்கம் வேண்டின் பைந்தமிழைப் பல்லூடகத்தின் வழியாகப் பரிணமித்திடச் செய்தல் அவசியம் என்பதை உணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொழில்நுட்பத்தில் தமிழ் திளைத்திடவும் முகிழ்த்திடவும் முன்னெடுத்த நிறுவனம்தான் தமிழ் இணையக் கல்விக்கழகம்.

இன்று தமிழ் இணையக் கல்விக்கழகம் உலகெங்கும் தன் தொடர்பு மையங்களை நிறுவி, தமிழ்ப் பரப்புரையும் பண்பாட்டுப் பரப்புரையும் செய்துவருகிறது. இருபத்தைந்தாண்டுகால உழைப்பின் பலனாக இணையத்தில் தமிழுக்கென தனித்த இடத்தைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் உறுதிசெய்துள்ளது. மேலும் தமிழ் மின்நூலகத்தினை உருவாக்கி ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள், பருவ இதழ்களை மின்னுருவாக்கம் செய்து பொதுவெளியில் வெளியிட்டு தமிழ்கூறும் நல்லுலகம் பயனடையப் பாடுபட்டு வருகிறது.

குரல் ஒலியும், சமிக்ஞையுமாய் உருவான தகவல் பரிமாற்றம் சுழியம், ஒன்று என்னும் இரண்டு எண்ணிமங்களாக உச்சத்தை எட்டியுள்ளது. அண்டத்தினூடாக அலைக்கற்றைகளாக உலாவும் தகவல்கள் பரிமாற்றங்கள் சுழியம் ஒன்று என சுருக்கமாய்ப் பரிமாறப்படுகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் செயல்பாடுகளை உலகிற்குப் பறைசாற்றும் ஊடகமாக இந்த கணித்தமிழ் மின்னிதழ் உருவாகியுள்ளது. கணினி ஊடாகச் செயற்கை நுண்ணறிவு யுகத்திற்கு ஏற்றவாறு தரவுகளை உருவாக்கிப் பராமரித்துப் பயிற்சி அளித்து, அதன் ஆய்வுப் பரிமாற்ற முறைகளைப் பதிவுசெய்து வெளியிடும் ஊடகமாக இம்மின்னிதழ் சிறப்புடன் அமைந்திட வாழ்த்துகிறேன்.

பழனிவேல் தியாக ராஜன்

நாள் : 16/12/2024

ஆசிரியர் உரை

சே. ரா. காந்தி, இ.ர.பா.ப.,
இயக்குநர்,
தமிழ் இணையக் கல்விக்கழகம்

தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பத்துறையின்கீழ், தன்னாட்சி நிறுவனமாக தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்பட்டு வருகிறது. உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் தங்களின் உயிர்நாடியான தமிழோடு இணைந்திருக்கும் வகையில் தமிழில் மின்னணு ஊடகங்கள் வழியாகத் தொடர்பில் இருக்குமாறு தமிழ் கல்விக்கான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது.

அறிவியலின் தொடர் கண்டுபிடிப்புகளிடையே தன்னை உட்செலுத்தி தரணியில் மிளிரும் மொழியாக உள்ளது தமிழ். அத்தகைய தமிழை இணையம் வழியாகக் கற்பிக்க உலகம் முழுவதிலும் 180 தொடர்பு மையங்களை உருவாக்கியுள்ளது. பல்லூடகத் தன்மையுடன்கூடிய பாடங்களை உருவாக்கியும் மழலைக்கல்வி, சான்றிதழ், மேற்சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம் முதலான படிநிலைகளில் தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்கியும் கல்விப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பண்டைத் தமிழரின் மரபுவழி அறிவான கலை, வாய்மொழி இலக்கியத்துடன், இன்றைக்கு உருவாகிவரும் புதிய தொழில்நுட்ப அறிவையும் தனக்குள் பொதிந்துவைக்கும் விதமாக டிஜிட்டல் நூலகத்தைக் கட்டமைத்து வருகிறது. இந்த நூலகம் இணையப் பார்வையாளர்களால் சுமார் 11 கோடிக்கும் அதிகமான பார்வைகளைக் கடந்துள்ளது.

இலக்கண இலக்கியத் தரவுகளைக் கொண்டு சொல் ஆய்வுக் கருவிகள், இலக்கணக் குறிப்பு தேடுதல், தமிழ்விரிதரவு, தமிழ் மின்நிகண்டு முதலான பொருண்மைகளில் ஆய்வுகளை மெற்கொண்டு நுட்பத்தீர்வுகளைக் கண்டுள்ளது.

'கணித்தமிழ் வளர்ப்போம்... காலத்தை வெல்வோம்.' என்ற முழக்கத்துடன் கல்லூரிகள்தோறும் கணித்தமிழ்ப் பேரவை என்னும் அமைப்பை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. மேலும் கணித்தமிழ் ஆய்வுகளை முன்னெடுக்கும் பிற நிறுவனங்களுடன் இணைந்து மொழித் தொழில்நுட்ப ஆய்வுகளைப் பரவலாக்கம் செய்யும் முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

நாள் : 16/12/2024

சே. ரா. காந்தி, இ.ர.பா.ப.,

38 அயலக நாடுகளிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் 180 தொடர்பு மையங்களைத் தொடங்கி தமிழ்க் கல்விக்கான பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

உலகமெலாம் பரவும் தேமதுரத் தமிழோசை

அயலகத் தமிழர்கள் இன்று, தங்கள் பண்பாட்டு வேர் என்ற தளத்தில் நின்று, புற உலகுடன் உறவாடுகின்றனர். இதனை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல ஆர்வத்துடனும் உறுதியுடனும் முனைகின்றனர். இந்த அரிய முயற்சிக்குத் தமிழ் மொழிக் கல்வி இன்றியமையாததாகும். தமிழ் இணையக் கல்விக்கழகம் கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக இணையத்தின் துணையுடன் இப்பணியை மேற்கொண்டு வருகிறது. இதுவரை 38 அயலக நாடுகளிலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் 180 தொடர்பு மையங்களைத் தொடங்கி, அவற்றின் மூலம் மாணவர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கான பாடத்திட்டம், இணையவழி வகுப்புகள், தேர்வுகள் முதலிய தமிழ்க் கல்விக்கான பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் 2022 இல் தொடங்கிவைக்கப்பட்ட தமிழ்ப் பரப்புரைத் திட்டத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட பணிகள் அயலக மாணவர்களின் தேவையையும் திறனையும் அறிந்து விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.



கற்றல் வளங்கள்

காலமாற்றத்திற்கு ஏற்பத் தமிழ் மொழியில் எளிமையும் புதுமையும் புகுத்தி, அயலக மாணவர்களிடம் கொண்டுசேர்க்கும் விழைவின் பலனாக, இதுவரை 6 நிலைகளில் வழங்கப்பட்டு வந்த சான்றிதழ் மற்றும் மேற்சான்றிதழ்க் கல்வித் திட்டங்கள், அகரம், இகரம், உகரம், ழகரம், சிகரம் என்னும் ஐந்து நிலைகளாக, கற்றல் திறன்கள் (கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்) அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

வ. எண்.	நிலைகள்	குறைந்தபட்ச வயது வரம்பு
1	அகரம்	5 வயது
2	இகரம்	7 வயது
3	உகரம்	10 வயது
4	ழகரம்	13 வயது
5	சிகரம்	15 வயது

மாணவர்களின் பல்லூடகக் கற்றலை (Multimodal learning) மேம்படுத்தும் வண்ணம் இப்பாடத்திட்டத்திற்கான ஒலிப் புத்தகம் (Audio book), ஒலிக்குறிப்புப் புத்தகம் (Read along book), அசைவூட்டுக் காணொலிகள் (Animation videos), காணொலிப் பாடங்கள் (Video lessons), மின்னட்டைகள் (Flash cards) உள்ளிட்ட துணைக்கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், அகரம் நிலைக்கான பாடப்புத்தகம் 24 மொழிகளில் மொழிபெயர்ப்பும், 13 மொழிகளில் ஒலிபெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது.

இணையவழி வகுப்புகள்

தமிழ் கற்றலுக்குத் தூரமோ நேரமோ தடையில்லை என்னும் குறிக்கோளுடன், பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் துணையுடன் இணையவழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அயலக மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப இந்த இணையவழி வகுப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுக்குச் சராசரியாக 2,500 மாணவர் பதிவு என்ற நிலையிலிருந்து 2023-24 இல் 30,000 மாணவர்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் பதிவு செய்துள்ளனர்.

ஆசிரியர் பட்டயப் பயிற்சி

அயலக நாடுகளில் பெரும்பாலும் தன்னார்வலர்களால் மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இத்தன்னார்வலர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, ஓராண்டு ஆசிரியர் பட்டயப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதன் மூலம் இவர்கள் தமிழ் மொழியின் அடிப்படைகளையும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறைகளையும் அறிந்து கொள்ளலாம்.

பேச்சுத்தமிழ்ப் பயிற்சி

இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து அலுவலகப் பணி, பிற வேலைகள் காரணமாகவும் பலர் தமிழ்நாட்டிற்குப் புலம்பெயர்ந்து வருகிறார்கள். வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாட்டிற்கு வருவோருக்குத் தமிழ் கற்பிப்பது கட்டாயமாகிறது. முதற்கட்டமாக, புலம்பெயர் வெளிமாநிலத் தொழிலாளர்கள், ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு இந்தி வழியில் பேச்சுத்தமிழ் வகுப்புகள், இணைய வழியில் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட முன்னெடுப்புகள் காரணமாக ஆண்டுக்குச் சராசரியாக 2,500 மாணவர் பதிவு என்ற நிலையிலிருந்து 2023-24 இல் 30,000 மாணவர்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்ப் பண்பாட்டுப் பரப்புரை

மொழிக் கல்வியின் அடுத்த படிநிலை, பண்பாட்டுத் தொடர்பு ஆகும். மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாட்டை அயலக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் கீழ்க்காணும் தமிழ்ப் பண்பாட்டுப் பரப்புரைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- மரபுவழிப் பண்ணிசைப் பயிற்சி
- சிலம்பம், தேவாரம் — திருவாசகம் காணொலிகள் உருவாக்கம்
- ஓவியங்கள் மற்றும் விளக்கங்களுடன், சங்க இலக்கிய நாள்காட்டி உருவாக்கம்
- அயலக மாணவர்களுக்கான இணைய வழிப் போட்டிகள்

நிதியுதவி

அயலகத் தொடர்பு மையங்களில் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான மதிப்பூதியம், வகுப்பறைகளுக்கான வாடகைக் கட்டணம் உள்ளிட்டவற்றுக்கு நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஃபிஜி பள்ளிகளில் தமிழ் கற்பிக்க ஆசிரியர்கள் இருவரை அனுப்பி வைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்க் கல்வியை இணையவழியில் கொண்டு சென்று, அயலகத் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தொடர்புக்குப் பாலம் அமைக்கும் நிறுவனமாகத் தமிழ் இணையக் கல்விக்கழகம் தனது கல்விப் பணியைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது; தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயா சங்கதன், சென்னை மண்டலத்தின் கீழ் 51 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளின் கல்வி நடைமுறை விதிகளின் பிரிவு 112 வழிவகை செய்கிறது. அதாவது, ஒரு பள்ளியைச் சேர்ந்த 15-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு மொழிப் பாடத்தைக் கற்பிக்கக் கோரினால் அதற்கான ஏற்பாடுகளை அந்தப் பள்ளி செய்து தர வேண்டும் என விதிகள் கூறுகின்றன. இதன்படி சில கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. எனினும், இதற்கான முறையான பாடத்திட்டமோ, தேர்வு முறையோ, தகுதிச் சான்றிதழோ மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால், தமிழ்நாட்டிலேயே பிறந்து 12ஆம் வகுப்பு வரை கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் கற்பதற்கான வாய்ப்பும் வழிவகையும் இருப்பதில்லை. இதனால், மாணவர்கள் பல பின்னடைவுகளைச் சந்திக்கின்றனர்.

எனவே, தமிழ்ப் பரப்புரைக்கழகத்தின் கீழ், கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவர்கள் தமிழ் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு கேந்திரிய வித்யாலயா சங்கதன் பெரிதும் துணைபுரிந்து வருகிறது. முதற்கட்டமாக, கேந்திரிய வித்யாலயா சங்கதனின் சென்னை மண்டலப் பள்ளி முதல்வர்கள் கூட்டத்தில் (கோயம்புத்தூர், மதுரை) தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் கல்வித் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளின் காலை வணக்கக் கூட்டங்களில் மாணவர்களுக்கும் த.இ.க.வின் பாடத்திட்டம் குறித்து விளக்கப்பட்டது. மேலும், த.இ.க.வின் சிற்றேடுகள் புலனவழியில் மாணவர்களுக்குப் பகிரப்பட்டன.

இதன் விளைவாக, 4 கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தமிழ் இணையக் கல்விக்கழகக் கல்வித் திட்டமானது 2023-2024 ஆம் ஆண்டில் சென்னை மண்டலத்தில் உள்ள 50 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ்ப் பரப்புரைக்கழகத்தின் கீழ், கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவர்களுக்கு தமிழ் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்

கேந்திரிய வித்யாலயாக்களில்

தமிழ்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடத்திட்டத்தை மாணவர்களுக்குக் கற்பிக்க, பள்ளி பாடவேளைக்குப் பிறகு அவர்களுக்கு ஏற்ற நேரத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு இணையவழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

பாடத்திட்டம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடத்திட்டம் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மாணவர்களுக்காக அகரம், இகரம், உகரம், மழகரம், சிகரம் என்ற ஐந்து நிலைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களது மொழி ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எளிமையும் புதுமையும் புகுத்தி, குறுகிய கால அளவில் தமிழ் மொழியின் அடிப்படைகளைக் கற்கும் வண்ணம் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவர்களுக்கும் இவை பொருந்தும் என்பதால், அவர்களுடைய பல கல்விப் பணிகளுக்கிடையே தமிழ் மொழியை எளிதாகக் கற்கும் வாய்ப்பை இந்தப் பாடத்திட்டம் ஏற்படுத்தித் தருகிறது.

மேலும், மாணவர்களின் பல்லூடகக் கற்றலை மேம்படுத்தும் வண்ணம் துணைக்கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அகரம் முதல் பருவத்திற்கான பாடப்புத்தகம் 24 மொழிகளில் மொழிபெயர்ப்பும், 13 மொழிகளில் ஒலிபெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடக்க நிலையில், மாணவர்கள் தங்களுக்கு அறிமுகமான மொழி மூலம் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளலாம். இந்தக் கற்றல் வளங்கள் அனைத்தும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்தில் கட்டற்ற வளமாக (open source) வெளியிடப்பட்டுள்ளன.

இணையவழித் தமிழ் வகுப்புகள்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடத்திட்டத்தை மாணவர்களுக்குக் கற்பிக்க, பள்ளிப் பாடவேளைக்குப் பிறகு அவர்களுக்கு ஏற்ற நேரத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு இணையவழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்புகளில் இன்றைய தலைமுறை மாணவர்களுக்கு ஏற்றவாறு பல்லூடகக் கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்தி தமிழ் மொழியைக் கேட்டறியப், பேச, படிக்க, எழுதக் கற்றுத்தரப்படுகிறது.

தேர்வுகள்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாக உலகிலுள்ள அனைத்துத் தொடர்பு மையங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி–ஆகஸ்ட் மாதத்தில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதைப் போன்று, கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவர்களுக்கும் சான்றிதழ்க் கல்விக்கான தேர்வுகள் அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை ஏற்பளிப்பு (Recognition) பெற்றுள்ள தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சான்றிதழ்க் கல்வியில் கேந்திரிய வித்யாலயா பள்ளி மாணவர்கள் கற்பதால் அவர்கள் தங்களது தாய்மொழியும் செம்மொழியுமான தமிழைக் கற்றுக்கொள்கின்றனர். இதன் மூலம் தமிழ்நாட்டிலேயே பிறந்து, தமிழ்நாட்டிலேயே பள்ளிப் பருவத்தைக் கழிக்கும் மாணவர்களுக்குத் தமிழை எழுதப் படிக்கத் தெரியவில்லை என்ற நிலை மாறி வருகிறது. மேலும், எதிர்காலத்தில் இம்மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுகளுக்கும் இந்தக் கல்வித்திட்டம் உதவி புரியும்.



ஆரியமாயை

398 | 0 | 0 | 90



அண்ணாவின்
சட்டசபைச் ...

195 | 0 | 0 | 46



அண்ணா பேசுகிறார்!

239 | 0 | 0 | 58



அண்ணல் நபி பற்றி
அறி ...

231 | 0 | 0 | 49



தம்பிக்கு
அண்ணாவின் ...

135 | 0 | 0 | 36



தம்பிக்கு
அண்ணாவின் ...

86 | 0 | 0 | 17



தம்பிக்கு
அண்ணாவின் ...

107 | 0 | 0 | 21

பேரறிஞர்
அண்ணாவின் ப ...

166 | 0 | 0 | 28

அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்



தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் 150 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

மெட்ராசு கூரியர் (Madras Courier)

பேரறிஞர் அண்ணா (1909 - 1969) - ஆவணத் தொகுப்பு

தமிழக நாட்டுப்புறக்
...

9185 | 0 | 0 | 1260

தமிழகம் இலங்கை
ஊர்ப் ...

958 | 0 | 0 | 194

கீழடி

1113 | 0 | 0 | 204

பாரதிதாசன்

400 | 0 | 0 | 16

அறிவுச் சாறு தரும் நூற்கனிச் சோலை

தமிழ் இணையக் கல்விக்கழக மின் நூலகத்தின் சிறப்புக் கூறுகளில் ஒன்று தொகுப்புகள் பகுதி. தமிழ் மின் நூலகத்துக்கு வரும் வாசகர் ஒருவர், தொகுப்புகள் பகுதியைச் சொடுக்கினால், ஒரு புதிய சாளரம் திறக்கும். அதிலே தற்போது பேரறிஞர் அண்ணா (1909 - 1969) - ஆவணத் தொகுப்பு முதலிய எட்டுத் தொகுப்பாற்றுப்படைகள் இடம்பெற்றுள்ளன. இதில் தொடர்ந்து நூல்கள் வெவ்வேறு பொருண்மைகளில் தொகுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆகவே, எதிர்வரும் நாட்களில் தொகுப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஒவ்வொரு தொகுப்பையும் தனித்தனியே சொடுக்கி ஒவ்வொன்றிலும் உள்ள ஏராளமான நூல்களை, இதழ்களை, சுவடிகளை வாசிக்கலாம். ஆய்வாளர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கக்கூடிய தொகுப்பு நூல்கள் இவை. இந்த இதழில் பேரறிஞர் அண்ணா ஆவணத் தொகுப்பில் என்னென்ன நூல்கள் உள்ளன என்பதைப் பார்க்கலாம்.

அண்ணாவின் சிந்தையில் உதித்த திராவிடக் கருத்துகளைத் தாங்கிய கருத்திதழ்கள், கருத்தியல் நூல்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவை இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. திராவிட நாடு, மாலை மணி, காஞ்சி ஆகிய இதழ்கள் ஏராளமாகப் பதிவேற்றப்பட்டுள்ளன. ஆய்வு நோக்கிலோ, அறிந்துகொள்ளும் ஆர்வத்திலோ இந்தப் பக்கத்துக்கு வரும் வாசகரை முழுக்க முழுக்கத் தன்வயப்படுத்தும் வல்லமை கொண்ட தொகுப்பு இது. சொடுக்கச் சொடுக்க அரிய தகவல்களைக் கொண்ட நூலும் இதழும் உங்கள் கண் முன்னே விரிந்து கொண்டே இருக்கும்.

ஆரிய மாயை, ஓர் இரவு, அண்ணாவின் சட்டமன்றச் சொற்பொழிவுகள், அண்ணாமலை பல்கலைக்கழகப் பேருரை, வானொலியில் அண்ணா நிகழ்த்திய சொற்பொழிவுகளடங்கிய நூல், அண்ணாவின் சிறுகதைகள், அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள் என வெவ்வேறு வகையான பொருண்மைகளில் அண்ணா எழுதிக் குவித்த எழுத்துகளை நீங்கள் வாசித்து இன்புறலாம். பேரறிஞர் அண்ணா குறித்து இராம.அரங்கண்ணல் எழுதிய நினைவலைகள் நூல் இங்கே உள்ளது. சுவாரசியமான செய்திகளின் சுரங்கமான இத்தொகுப்பு உங்கள் வாசிப்புக்கு வளம்சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

அண்ணாவின் சிந்தையில் உதித்த திராவிடக் கருத்துகளைத் தாங்கிய கருத்திதழ்கள், கருத்தியல் நூல்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவை இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. திராவிட நாடு, மாலை மணி, காஞ்சி ஆகிய இதழ்கள் ஏராளமாகப் பதிவேற்றப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பத் துறைக்கான வளங்களை உருவாக்குவதிலும் தமிழ்நாடு பன்முகத் தளங்களில் உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் வெற்றிகரமான தொடக்கங்களுள் ஒன்றுதான், ‘தமிழிணையம்99’ மாநாடு.

கணித்தமிழ்24 மாநாடு

செயற்கை நுண்ணறிவு யுகத்தில் தமிழ்

எந்தவொரு புதிய தொழில்நுட்பம் தலைதூக்கும்போதும், அதில் தமிழுக்கான இடம் என்ன என்று கேட்டுக்கொள்வது இன்று நேற்றல்ல; அதற்கு நாற்பது ஆண்டுகால வரலாறு இருக்கிறது. கணினித் தொழில்நுட்பம் வளர்ந்துவந்த காலத்திலேயே தமிழ்நாட்டில் எண்ணற்ற முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அதைத் தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பம் என்ற புதிய துறை முளைவிடத் தொடங்கியபோது, இது எதிர்காலத்தில் பெரும் புரட்சியை உருவாக்கும் என்று முன்கூட்டியே கணித்தவர்கள் தமிழர்கள். 1997-லேயே தகவல் தொழில்நுட்பத் துறைக்கென இந்தியாவிலேயே முதன்முறையாகக் கொள்கை வகுத்த மாநிலம் தமிழ்நாடுதான். அதற்கு ஆறு ஆண்டுகள் கழித்தே இந்தத் துறைக்குத் தேசிய அளவில் கொள்கை வகுக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறைக்கான வளங்களை உருவாக்குவதிலும் தமிழ்நாடு பன்முகத் தளங்களில் உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் வெற்றிகரமான தொடக்கங்களுள் ஒன்றுதான், 'தமிழிணையம்99' மாநாடு.

முத்தமிழறிஞர் கலைஞரால் 1999-இல் 'தமிழிணையம்99' மாநாடு நடத்தப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில், தமிழ்நாட்டை ஒப்பிட வெளிநாடுவாழ் தமிழர்கள் இணையத் தொழில்நுட்பத்தில் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள். தமிழ் இணையப் பயன்பாட்டாளர்களில் 80-90% பேர் இந்தியாவுக்கு வெளியே வாழ்ந்துவந்த தமிழர்களாகத்தான் இருந்தார்கள். தமிழ் எழுத்துருக்களையும் தமிழ் தட்டச்சு முறைகளையும் அதிக அளவில் உருவாக்கியவர்களும் அவர்களே. இந்தப் பின்னணியில், தமிழ்நாட்டிலிருந்து தமிழ்ச் சார்ந்த சிறந்த தொழில்நுட்பங்கள் வர வேண்டும் என்ற நோக்கில் 'தமிழிணையம்99' மாநாடு நடத்தப்பட்டது.





'தமிழ்99' விசைப்பலகை தரப்படுத்தப்பட்டது அந்த மாநாட்டில்தான். அதேபோல், பல்வேறு எழுத்துரு குறியாக்கங்கள் (encoding) இருந்து வந்த நிலையில் TAB, TAM என்ற இரண்டு பொதுவான செந்தரங்கள் கொண்டுவரப்பட்டதும் அந்த மாநாட்டில்தான். இப்படித் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பப் பயணத்தில் 'தமிழிணையம்99' மாநாட்டிற்கு முக்கியமான பங்கு உண்டு. அந்த மாநாட்டுக்குப் பிறகு, கால் நூற்றாண்டு காலம் கழித்து 'கணித்தமிழ்24' மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது தமிழ்நாடு அரசு.

'தமிழிணையம்99' மாநாட்டுக்குப் பிறகான காலக்கட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி மிக அதிகம். இத்தகைய தொழில்நுட்ப யுகத்தில் தமிழின் நிலை குறித்து ஆராயவும், விவாதிக்கவும், புதிய சிந்தனைகளை உருவாக்கவும், இளம் திறமைகளை அடையாளம் காணவும் எனப் பல்வேறு இலக்குகள் 'கணித்தமிழ்24' மாநாட்டின் பொருட்டு நிர்ணயிக்கப்பட்டிருந்தன. இந்த மாநாட்டின் வழியாக, தொழில்நுட்பத் துறையில் தமிழின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான சூழல் உருவாகியுள்ளது. புதிய தலைமுறையின் கவனம் இதன் பக்கம் திரும்பியுள்ளது.

'கணித்தமிழ்24' மாநாட்டின் பொருட்டு அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்தும், இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களிலிருந்தும் தலைசிறந்த ஆளுமைகள் அழைக்கப்பட்டார்கள். கூகுள், மைக்ரோசாஃப்ட், லிங்க்ட்இன், டெக் மகேந்திரா, ஏஜ சிங்கப்பூர் உள்ளிட்ட புகழ்பெற்ற நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்துகொண்டார்கள். இவர்களில் சிலர் மாநாட்டுக்குப் பிறகும் நம் மாணவர்களோடு சொற்பொழிவாற்ற இசைவு தெரிவித்தார்கள். மாணவர்களுக்குப் பாடத்திட்டங்களுக்கு வெளியே கற்றுக்கொடுக்கும் திட்டமான 'மாபெரும் தமிழ்க் கனவு' நிகழ்ச்சியின் பகுதியாக, இந்த அறிஞர்கள் நம் கல்லூரி மாணவர்களிடம் உரையாற்றினார்கள்.

பன்னாட்டுக் கணித்தமிழ்24 மாநாடு வெவ்வேறு அம்சங்களைக் கொண்டிருந்தது. தமிழறிஞர்கள், மொழித் தொழில்நுட்ப வல்லுநர்கள், மொழித் தொழில்நுட்பத்தை உருவாக்கும்/பயன்படுத்தும் நிறுவனங்களைச் சேர்ந்த ஆளுமைகள் ஆகியோர் விரிவுரை வழங்கினார்கள். ஆளுமைகளுக்கு இடையேயான குழு விவாதங்களும் நடைபெற்றன.

25 ஆண்டுகளுக்கு முன்பு 'தமிழிணையம்99' மாநாடு நடைபெற்ற அதே நாளில் 'கணித்தமிழ்24' மாநாடும் நடந்திருக்கிறது. 'தமிழிணையம்99' மாநாட்டின் விளைவாக உருவான தமிழ் இணையக் கல்விக்கழகம்தான் 'கணித்தமிழ்24' மாநாட்டை நடத்தியிருக்கிறது. ஒரு சுழற்சிபோல் இது நிகழ்ந்திருக்கிறது.

மாநாடு நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பாகவே, உலகெங்கிலும் கணித்தமிழ் தொடர்பான ஆய்வில் ஈடுபடுகிறவர்களிடமிருந்தும், தமிழ் மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் மொழிச் சார்ந்த மென்பொருள் உருவாக்குவோரிடமிருந்தும் ஆய்வுக்கட்டுரைகள் பெறப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 38 கட்டுரைகள் 'கணிக்கோவை' என்ற பெயரில் புத்தகமாகத் தொகுக்கப்பட்டு, மாநாட்டின் தொடக்க விழாவில் வெளியிடப்பட்டது. இந்த 38 ஆய்வாளர்களும் மாநாட்டில் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார்கள். இதிலிருந்து சிறந்த மூன்று ஆய்வுக்கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இதேபோல, 'ஸ்டார்ட்அப் தமிழ்நாடு' நிறுவனத்துடன் இணைந்து நிரலாக்கப் போட்டியும் நடத்தப்பட்டது. இதன் வழியாக இளம் தொழில்நுட்ப வல்லுநர்களை அடையாளம் காண வேண்டும் என்பதுதான் நோக்கம். பல்வேறு நிலைகளில் வழிகாட்டுதல்களும் வடிகட்டல்களும் நடைபெற்றன. மாநாட்டில் செயல்விளக்கம் வழங்குவதற்குப் பத்து நபர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. சிறந்த மூன்று நபர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இவற்றோடு, மொழித் தொழில்நுட்பங்கள் தொடர்பான அதிநவீனத் தயாரிப்புகள், திட்டங்கள், புதிய சிந்தனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் விதமான 43 காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டன. தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், புத்தொழில் நிறுவனத்தினர் இதில் பங்கேற்றார்கள்.

'கணித்தமிழ்24' மாநாட்டின் இன்னொரு முக்கியமான அம்சம், 'கணித்தொகை' எனும் மாநாட்டுச் சிறப்பு மலர். தமிழிணையம்99 மாநாடு முதல் கணித்தமிழ்24 மாநாடு வரையிலான காலக்கட்டத்தில் இந்தத் தளத்தில் கணித்தமிழ் கடந்துவந்த பாதையை எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணம் இந்த மலர். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் வெளியிட்ட 'கணிக்கோவை', 'கணித்தொகை' இரண்டையும் தற்போது தமிழ் இணையக் கல்விக்கழக மின்னூலகத்தில் பதிவிறக்கிக் கொள்ளலாம்.

சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள வர்த்தக மையத்தில் பிப்ரவரி 8, 9, 10 ஆகிய மூன்று நாள்கள் 'கணித்தமிழ்24' மாநாடு நடைபெற்றது. 25 ஆண்டுகளுக்கு முன்பு 'தமிழிணையம்99' மாநாடு நடைபெற்ற அதே நாளில் 'கணித்தமிழ்24' மாநாடும் நடந்திருக்கிறது. 'தமிழிணையம்99' மாநாட்டின் விளைவாக உருவான தமிழ் இணையக் கல்விக்கழகம்தான் 'கணித்தமிழ்24' மாநாட்டை நடத்தியிருக்கிறது. ஒரு சுழற்சிபோல் இது நிகழ்ந்திருக்கிறது. அன்று, 'தகவல் தொழில்நுட்ப யுகத்தின் மின்னல் வேக வளர்ச்சியில் தமிழ்மொழி பின்தங்கிவிடக் கூடாது' என்ற அக்கறையுடன் 'தமிழிணையம்99' மாநாடு நடத்தப்பட்டது. 'வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவு யுகத்தில் தமிழுக்கான இடம் என்ன?' என்பதை உறுதிசெய்யும் விதமாக செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் மொழித் தொழில்நுட்பத்திற்கென ஒரு மாநாட்டை இந்தியாவிலே முதன்முறையாகத் தமிழ்நாடுதான் முன்னெடுத்திருக்கிறது.

கணித்தமிழ்

மென்பொருள்களும் ‘தமிழைப் பிழையின்றி எழுதுவோம்’ நூலும்

தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள ஏழு மென்பொருள்களும், ‘தமிழைப் பிழையின்றி எழுதுவோம்’ நூலும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களால் 27.08.2024 அன்று தமிழ் இணையக் கல்விக்கழகக் கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டன. செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனத் தமிழ்கூறும் நல்லுலகம் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இந்த ஏழு மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியப் பதிப்பி, தமிழ் உரையாடி, கல்வெட்டுப் படிப்பான், தமிழ் இலக்கணம் கற்றுணரி ஆகிய நான்கு மென்பொருள்களும் தமிழ்நாடு மென்பொருள் மேம்பாட்டு நிதியில் உருவாக்கப்பட்டவை. இதேபோல, ஏழு கணித்தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்படும் என்று சட்டமன்ற அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. அவற்றுள் முதலாவதாக, கலைஞர் இலக்கணப் பகுப்பி என்ற மென்பொருள் கணித்தமிழ்24 மாநாட்டில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, தமிழ் ஆர்வலர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து, பொருளாய்வி மென்பொருள், தமிழ் கிளைமொழிப் பேச்சொலியை எழுத்து வடிவில் மாற்றும் மென்பொருள், தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பத்தி அமைக்கும் மென்பொருள் ஆகிய மூன்றும் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டன. மீதமுள்ள மூன்று மென்பொருள்களும் இறுதிக்கட்ட உருவாக்கத்தில் உள்ளன.

அனைத்துத் தரப்பினரும் மிக எளிதாகப் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏழு மென்பொருள்களையும் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் (https://www.tamilvu.org/) கட்டணமின்றிப் பதிவிறக்கிக் கொள்ளலாம். இந்த மென்பொருள்கள் குறித்த சிறு குறிப்பு பின்வருமாறு:

தமிழ் இலக்கியப் பதிப்பி (Index Concordance): இம்மென்பொருள் தமிழ் இலக்கியங்களுக்குச் சொல்லடைவு, தொடரடைவு போன்றவற்றைத் தொகுத்து வழங்குகிறது.

தமிழ் உரையாடி (Chatbot for Tamil Virtual Academy's Lessons): தமிழ் இணையக் கல்விக்கழகச் சான்றிதழ்க் கல்வி, பட்டயம் மற்றும் பட்டப் படிப்புக்கான பாடங்களை எளிதாகப் படிக்கவும் புரிந்துகொள்ளவும் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுப் படிப்பான் (Inscription Reader): இம்மென்பொருள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கி.பி. 6 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளைத் தற்காலத் தமிழ் எழுத்துகளாக மாற்றுகிறது.

தமிழ் இலக்கணம் கற்றுணரி (Tamil Learning App): மாணவர்கள் தமிழ் மொழியை எளிய முறையில் விளையாட்டு மூலம் கற்றுக்கொள்ளும் வகையில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொருளாய்வி மென்பொருள் (Parts of Speech & Semantic Roles Labelling): இம்மென்பொருள் தமிழ் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்கு முறையான இலக்கணக் குறியீடுகளை வழங்குகிறது. மேலும், இம்மென்பொருள் அவ்வாக்கியத்தில் உள்ள சொற்பொருள் பாத்திரங்களைப் (Semantic Roles Labelling) பகுப்பாய்வு செய்கிறது.

தமிழ்ப் பேச்சொலியை (வட்டார வழக்கு) எழுத்து வடிவில் மாற்றுதல் (Text to Speech): இம்மென்பொருள் தமிழ்க் கிளைமொழிப் பேச்சொலியை (Regional Dialects) நேரடியாக எழுத்து வடிவத்திற்கு

மாற்றும் திறனைக் கொண்டது. இது தமிழ் நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பகுதிக் கிளைமொழிகளை அடையாளம் கண்டு எழுத்து வடிவமாக மாற்றுகிறது.

தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பத்தி அமைத்தல் (Hyphenation for Tamil Typesetting): இம்மென்பொருள், தமிழ்ச் சொற்களை அசையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கிறது, இதன் மூலம் பத்திகள் நன்றாக வரிசைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன.

அடுத்ததாக, அன்னைத் தமிழை எழுத்துப் பிழைகள் மற்றும் இலக்கணப் பிழைகளின்றி எழுதுவதற்காகத் தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள **‘தமிழைப் பிழையின்றி எழுதுவோம்’** நூல் வெளியிடப்பட்டது. தமிழ் எழுத்துகள், சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் அடிப்படையை எளிய தமிழில் சீர்மிகு முறையில் தொகுத்துத் தந்திருக்கும் நூல் இது. சொற்பிரிப்பு, சொற்சேர்க்கை முறைகள், புணர்ச்சி விதிகள், மொழிநடை எனப் பல்வேறு பொருண்மைகள் இந்நூலில் கையாளப்பட்டுள்ளன.

கணித்தமிழ்ப் பேரவை

மொழித் தொழில்நுட்பம் தொடர்பாகப் பல்வேறு முன்னோடிப் பணிகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு எந்த அளவு தமிழின் தொன்மைக்கும் பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததோ அதற்கு நிகராகப் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப தமிழைக் கொண்டுசெல்வதற்கும் முயற்சி எடுத்தது. குறிப்பாக, இளம் தலைமுறையை மொழித் தொழில்நுட்பத் திசையில் வழிநடத்துவது அதன் முக்கியமான நோக்கமாக இருந்தது. அந்த அக்கறையின் வெளிப்பாடுகளுள் ஒன்றுதான் கணித்தமிழ்ப் பேரவை.

கல்லூரிகள் தோறும் கணித்தமிழ்ப் பேரவையைத் தொடங்கிச் செயல்படுத்தத் திட்டமிட்டு, 2015ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதல் பேரவை தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, கலை அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, கால்நடை மருத்துவ அறிவியல், மீன்வளம் ஆகிய துறைகளைக் கொண்ட கல்லூரி என 100 கல்லூரிகளில் கணித்தமிழ்ப் பேரவைகள் தொடங்கப்பட்டன. கணினியில் ஒருங்குறி எழுத்துகளைக் கொண்டு தமிழில் தட்டச்சு செய்தல், தமிழ் மென்பொருள்கள் உருவாக்குதல், தமிழில் தரவுகளை உருவாக்குதல், தரவுகளை இணையவெளியில் கிடைக்கச் செய்தல் முதலான தமிழ்ப் பணிகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்துடன் பங்களிக்கும் வகையில் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு அரசின் ஆதார நிதி உதவியாகக் கல்லூரி ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டது. அந்த 100 கல்லூரிகளில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள், துறைசார்ந்த பயிற்றுநர்களைக் கொண்டு ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலகப் பணியாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தியது.

விளைவாக, இப்பேரவையானது கட்டற்ற மென்பொருள்களை அறிமுகம் செய்து வைத்ததுடன், தமிழில் உள்ள அனைத்துத் துறைசார் பங்களிப்பாளர்களையும் உள்ளடக்கி, காப்புரிமையற்ற வகையில் தமிழில் தரவுகளை உருவாக்கியது. தமிழில் வலைப்பூக்கள் உருவாக்குதல், இலக்கியத் தரவுகளையும் வாய்மொழி வழக்காறுகளையும் விளையாட்டுகளையும்

கணித்தமிழ்ப் பேரவை

கணித்தமிழ் வளர்ப்போம்.. காலத்தை வெல்வோம்.



செயலிகள் வடிவில் உருவாக்குதல் எனப் பங்களிப்புகள் வளர்ந்தன. கணித்தமிழ்ப் பேரவையின் ஆக்கபூர்வமான பங்களிப்புகளைக் கருத்தில் கொண்டு, 2019இல் மேலும் 100 கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இப்படி, தமிழில் தரவுகளைத் தொடர்ந்து உருவாக்கி வருவதோடு, மாணவர்களின் வேலைவாய்ப்புக்கான அடிப்படைக் கணினிப் பயிற்சியும் நிரல்கள் உருவாக்குவதற்கான பயிற்சியும் கணித்தமிழ்ப் பேரவை வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு எந்த அளவு தமிழின் தொன்மைக்கும் பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததோ அதற்கு நிகராகப் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப தமிழைக் கொண்டு செல்வதற்கும் முயற்சி எடுத்தது.

வேளாண்மை, பொறியியல், கலை, அறிவியல், மீன்வளம், கடல்சார் அறிவியல் குறித்த தரவுகளை ஆசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் தாங்களே உருவாக்குவதுடன் அவற்றைப் பிறரும் விலையின்றிப் பயன்படுத்தி வருகின்றனர். பெருந்திரள் மொழி மாதிரித் தரவுகள், செயற்கைத் தொழில்நுட்பவியல் தரவுகள் ஆகியவற்றை உருவாக்கவும், தமிழில் கைபேசிச் செயலிகளுக்கான நிரலாக்கத்தை உருவாக்கவும் எனக் கணித்தமிழ்ப் பேரவை மூலம் மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து செயல்படத் தொடங்கியுள்ளனர். தொழில்நுட்பக் களத்தில் தமிழ் வீறுநடை போடும் பொருட்டு, இளம் தலைமுறையை வழிநடத்தும் செயல்பாட்டைக் கணித்தமிழ்ப் பேரவை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.



மின்னுருவாக்கம் செய்ய...

உலகில் பேசப்படும் மொழிகளில் மிகப்பழமையான மொழியாகிய தமிழ்மொழியின் ஆய்வாதார வளங்களை அழிந்துவிடாமல் பாதுகாக்க, அவற்றை மின்னுருவாக்கம் செய்து ஆவணப்படுத்தி வருகிறது தமிழ் இணையக் கல்விக்கழகம்.

ஆய்வாதாரவளங்கள் என்பன அச்சுப்புத்தகங்கள், இதழ்கள், குறுவெளியீடுகள், ஓலைச்சுவடிகள், அரிய காகிதச்சுவடிகள், பழைய நாணயங்கள், செப்பேடுகள், புகைப்படங்கள், கல்வெட்டுகள், ஒலி-ஒளி ஆவணங்கள், தொல்லியல் சின்னங்கள் முதலியன மட்டுமின்றி இன்னபிறவும் ஆகும்.

பொதுமக்கள் மேற்கண்ட அரிய ஆய்வாதாரவளங்களை வைத்திருப்பின் அவற்றைப் பற்றிய தகவல்களைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்குத் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றது. ஆய்வாதாரவளங்களை மின்னுருவாக்கம் செய்தபின்னர் அவர்களிடமே அவை ஒப்படைக்கப்படும்.

பொதுமக்கள் மட்டுமின்றி பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள், ஆவணக்காப்பகங்கள், ஆதீனங்கள், மடங்கள், பொதுமன்றங்கள், சங்கங்கள், திருக்கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் இன்னபிற இடங்களிலும் உள்ள மேற்கண்ட ஆய்வாதரவளங்களைப் பற்றிய தகவல்களைக் கீழ்கண்ட மின்னஞ்சலுக்கு தகவல் அளிக்க விழைகின்றோம்.

ஆய்வாதார வளங்களை அளிக்கும் தனிநபர் அல்லது நிறுவனத்தின் பெயர் நன்றியறிதலுடன் அந்த ஆய்வாதாரத்தின் மின்னுருவாக்கத்தில் இடம்பெறும். ■

தொடர்புக்கு,
tva@tn.gov.in

TAMIL DIGITAL LIBRARY

அறிவைப் பொதுமை செய்வோம்

பாறைகளிலும்
பனையோலைகளிலும் காகிதங்களிலும்
காலங்காலமாக எழுதப்பட்டுவந்த
தமிழை மின்னூடகத்திற்கு
மாற்றியுள்ளோம். இந்தத் தமிழ்
வெள்ளத்தால் போகாது; வெந்தணலால்
வேகாது; கடற்கோளால் கொள்ள
முடியாது. அச்சுநூற்கள், இதழ்கள்,
ஓலைச்சுவடிகள், அரிய காகிதச்சுவடிகள்,
கல்வெட்டுகள், நிழற்படங்கள்,
ஓவியங்கள், சிற்பங்கள், செப்பேடுகள்
எனத் தமிழியல் ஆய்வாதாரங்கள்
அத்தனையும் இங்கே உள. இதுவரை
மறைக்கப்பட்டு வந்த அறிவை
உலகமாந்தர் அனைவருக்கும்
பொதுமையாக்கும் முயற்சி இது.

www.tamildigitallibrary.in